செ. கு. எண்: 048 நாள்: 24.04.2019

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி K.பழனிசாமி அவர்களின்

## அறிக்கை – 24.4.2019

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், தா. பழூர் மதுரா, பாலசுந்தரபுரம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி முத்துப்பிரியா என்பவரின் மகன்கள் இராமன் மற்றும் லெட்சுமணன் ஆகிய இரட்டை குழந்தைகளும், மழையின் காரணமாக, தொகுப்பு வீட்டின் கூரை மற்றும் தரைதளம் வழியாக நீர் கசிவு ஏற்பட்டு, குளிர் தாங்காமல் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

வடகிழக்கு பருவ மழையின் போது, குளிர் தாங்காமல் உயிரிழந்த குழந்தைகள் இராமன் மற்றும் லெட்சுமணன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வினத்தில் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையினை கருத்திற்கொண்டு, **இறந்த குழந்தைகளின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து **நிவாரணமாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.**

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9